FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8348088

1. District : Krishnagiri PS: V & AC Year: 2026 FIR No.: 11/AC/2026 Date: 28-08-2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Pc Act, 1988, as amended Sections பிரிவுகள்: 7(A) and
(ii) Act சட்டம்: in 2018. Sections பிரிவுகள்: 12 r/w 7(A)
(iii) Act சட்டம்: BNSS Sections பிரிவுகள்: 106
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 27-08-2026 Date to : before 12.30 hrs.
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 28-08-2026 Time : 11.00 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Computer Typed.
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 70 KM South West.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : Selection Grade Town Panchayat, Denkanikottai.
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த காநி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. G. Sakthivel (b) Father's/ Husband's Name : S.V. Govindasamy.
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : Age-51 (d) Nationality : Indian (e) Passport No. : -
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : - Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : PA to SDRO (g) Address : O/o the Special District Revenue Officer (L.A), State Highways, Krishnagiri.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) Tr.S. Ravisankar, Age-59, S/o Sengottaiyan, Executive officer, Selection Grade Town Panchayat, Uthangarai, FAC Denkanikottai. Selection Grade Town Panchayat, Denkanikottai, Krishnagiri District. and 3 others.
(Separate sheet enclosed)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

-

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிணவிசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted :

Separate Sheets enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the investigation / Refused investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் தகவல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு அதன்படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

28.08.26.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

28.08.2026 at 12.30 hrs.

Name: பெயர் A.T. Jaikumar,
Rank: நிலை .....No. எண் .....
Depnty Superintendent of Police,
NSAC, krishnagiri.

கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண். 11/AC/2026 u/s 7(a) and 12 r/w 7(a) of the Prevention of Corruption Act, 1988, as amended in 2018, and Section 106 BNSS வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வ.எண். 12-ன் தொடர்ச்சி.

எதிரிகள்:

A-1 திரு.S.ரவிசங்கர்,
செயல் அலுவலர்,
தேர்வுநிலை பேரூராட்சி
ஊத்தங்கரை,
(மு.கூ.பொ) தேர்வுநிலை
பேரூராட்சி தேன்கனிக்கோட்டை,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

A-2 திரு.S.நவீன் குமார்,
பதிவறை எழுத்தர்,
தேர்வுநிலை பேரூராட்சி
தேன்கனிக்கோட்டை,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

A-3 திரு.G.முரளி,
தூய்மை பணியாளர்,
தேர்வுநிலை பேரூராட்சி
தேன்கனிக்கோட்டை,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

A-4 திரு.G.பாஸ்கர்,
க.எண்.4/2,
விவேகானந்தா நகர்,
செயிண்ட் ஜோசப் பள்ளி அருகில்,
தேன்கனிக்கோட்டை,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

இன்று 28.08.2026-ம் தேதி 11.00 மணிக்குக் காவல் துணை கண்காணிப்பாளராகிய நான் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் இருந்தபோது, திரு.G.சக்திவேல், சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரின் விவரம் பின்வருமாறு: அனுப்புநர்: திரு.G.சக்திவேல், சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கிருஷ்ணகிரி மாவட்டம். பெறுநர்: காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, கிருஷ்ணகிரி. ஐயா, நான் கிருஷ்ணகிரி, மாநில நெடுஞ்சாலைகள் துறை, தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நி.எ) அலுவலகத்தில் நேர்முக உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை Roc.No. 1096/2026/A1, நாள்: 07.07.2026-ன்படி சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலராக என்னை நியமித்திருந்தார். எனக்கு கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை தேர்வுநிலை பேரூராட்சி அலுவலர்கள், தேன்கனிக்கோட்டை பேரூராட்சிக்கு உட்பட்ட வார்டுகளில் சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில் வரி, கடை வாடகை வசூலித்தல், புதிய கட்டிடங்களுக்கு வரி விதித்தல், புதிய நிறுவனங்களுக்கு தொழில் வரி விதித்தல் மற்றும் காலி நிலங்களுக்கு வரிவிதித்தல் மற்றும் வசூல் செய்தல் ஆகிய பணிகளுக்கு முறையாக

வரிவசூல் செய்யாமல் இருக்கவும், புதிய கட்டிடங்களுக்கு வரிவிதிப்பில் சலுகைகாட்டவும், புதிய நிறுவனங்களுக்கு குறைவாக தொழில் வரி விதிக்கவும், கடைவாடகை வசூல் செய்யாமல் இருக்கவும் அலுவல் நேரத்தில் கையூட்டு பெறுவதாக கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பேரில் கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் காவல் குழுவினருடன் தேன்கனிக்கோட்டை தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகம் வந்து, 12.30 மணிக்கு திடீர் ஆய்வு மேற்கொண்டேன். ஆய்வுக்குழுவினர் பேரூராட்சி அலுவலகத்திற்குள் நுழையும் போது, போர்ட்டிகோவில் பிளாஸ்டிக் சேரில் அமர்ந்திருந்த நபர்களை உள்ளே அழைத்து வந்து அலுவலக ஹாலில் அமர வைக்கப்பட்டது. காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலர்கள் யாரும் வெளியே செல்லாதவாறும், வெளியில் இருந்து அலுவலகத்திற்குள் யாரும் வராதவாறும் காவலர்களை கொண்டு காப்பு போடப்பட்டது. பின்னர், தேன்கனிக்கோட்டை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் திரு.S.ரவிசங்கர் என்பவரிடம் நானும், காவல் துணை கண்காணிப்பாளரும் எங்களை அறிமுகம் செய்து கொண்டு, தேன்கனிக்கோட்டை தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகத்தில் திடீர் ஆய்வு மேற்கொள்ள வந்திருக்கும் விவரத்தை தெரிவித்தேன். திரு.S.ரவிசங்கர், ஊத்தங்கரை தேர்வுநிலை பேரூராட்சியில் செயல் அலுவலராக 24.02.2024-ம் தேதி முதல் பணிபுரிந்து வருவதாகவும், 15.03.2026-ம் தேதி முதல் தேன்கனிக்கோட்டை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலராக முழு கூடுதல் பொறுப்பு வகித்து வருவதாகவும் தெரிவித்தார். செயல் அலுவலரிடம் 27.08.2026-ம் தேதி அரசு கணக்கில் வசூலான தொகை குறித்து கேட்டதற்கு, Challan Register-Property Tax, Profession Tax, Water Charges, Non-Tax, Trade Licence, abstract-ஐ வரி தண்டலர் திருமதி.C.மீனாட்சி என்பவர் மூலம் ஆன்லைனிலிருந்து பிரிண்ட் எடுத்து ஆஜர் செய்து, ரூ.72,608/- வரி வசூல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார். நான், வசூல் செய்த பணத்தை ஆஜர் செய்ய கோரிய போது, திருமதி.C.மீனாட்சி ரூ.72,608/-க்கு சொத்து வரி மற்றும் குடிநீர் கட்டணமாக வசூல் செய்வதற்கு ரசீது மட்டும் போட்டுள்ளதாகவும், இன்னும் வரி வசூல் செய்யப்படவில்லை என்று தெரிவித்தார். மேலும், குடிநீர் கட்டணம் வசூல் செய்ய, மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி காவலர் திரு.V.பால்ராஜ் என்பவரிடம் ரூ.10,080/-க்கு ரசீது போட்டு கொடுத்துள்ளதாகவும், சொத்து வரி வசூல் செய்ய ரூ.62,528/-க்கு ரசீது போட்டு வைத்திருப்பதாகவும் தெரிவித்தார். பின்னர், செயல் அலுவலர்

திரு.S.ரவிசங்கர் அவர்கள் 25.08.2026-ம் தேதிக்கான Denkanikottai Town Panchayat Bank Receipt Voucher abstract-ஐ வரி தண்டலர் திருமதி.C.மீனாட்சி மூலம் இணையத்திலிருந்து பிரிண்ட் எடுத்து ஆஜர் செய்து, 25.08.2026-ம் தேதி அரசு கணக்கில் ரூ.29,485/- வசூல் செய்யப்பட்டுள்ளதாகவும், அதில் நூலக வரி ரூ.2,287/-, குடிநீர் கட்டணம் ரூ.1,440/- மற்றும் பேரூராட்சி பொது நிதி கணக்கில் ரூ,25,758/- என செலுத்தப்பட உள்ளதாக தெரிவித்தார். நான், அரசு கணக்கில் வசூலான தொகையை எண்ணிப்பார்க்கையில் ஐநூறு ரூபாய் தாள்கள் 38 எண்ணிக்கையில் ரூ.19,000/- இருந்தது. அதில் ரூ.10,485/- குறைவாக இருந்தது. நான், அந்தப் பணம் குறித்து கேட்டதற்கு திருமதி.C.மீனாட்சி அவர்கள், மேல்நிலை நீர்த்தேக்கதொட்டி காவலர் திரு.V.பால்ராஜ், தூய்மை பணியாளர்கள் திரு.S.சந்தோஷ் மற்றும் திரு.G.முரளி வார்டுகளுக்கு சென்று வரி வசூல் செய்து வருவதாகவும், இதில் 25.08.2026-ம் தேதி திரு.G.முரளி வசூல் செய்த சொத்து வரி மற்றும் குடிநீர் கட்டணம் ரூ.19,272/-ல் 27.08.2026-ம் தேதி காலை அலுவலகத்தில் வைத்து தன்னிடம் ரூ.19,000/- மட்டும் கொடுத்ததாகவும், ரூ.272/- தரவில்லை என்று தெரிவித்து, தேன்கனிக்கோட்டை பேரூராட்சி சொத்து வரி ரசீது எண்.2026-2027/200414/1/1953 to 2026-2027/200414/1/1955, 2026-2027/200414/1/1966 to 2026-2027/200414/1/1974 என மொத்தம் 12 ரசீதுகளை ஆஜர் செய்தார். ரசீதுகளின்படி வசூல் செய்திருக்க வேண்டிய ரூ.19,272/-ல் ரூ.272/- குறைவாக இருந்தது. மேலும், 25.08.2026-ம் தேதி வரி வசூலுக்கு சென்ற திரு.V.பால்ராஜ் மற்றும் திரு.S.சந்தோஷ் வசூல் செய்திருக்க வேண்டிய ரூ.8,649/-ஐ தற்போது வரை தன்னிடம் வழங்கவில்லை என்று தெரிவித்தார். மேலும், திரு.S.சந்தோஷ், வசூல் செய்திருக்க வேண்டிய சொத்து வரி ரூ.5,115/-க்கு ரசீது எண்.2026-2027/200414/1/1957 to 2026-2027/200414/1/1962 மற்றும் 2026-2027/200414/1/1964 போட்டுள்ளதாகவும், திரு.V.பால்ராஜ், வசூல் செய்திருக்க வேண்டிய சொத்து வரி ரூ.3,534/-க்கு ரசீது எண்.2026-2027/200414/1/1956, 2026-2027/200414/1/1963, 2026-2027/200414/1/1965 மற்றம் குடிநீர் கட்டண ரசீது எண். 2026-2027/200414/2/304 போட்டுள்ளதாகவும், ஆனால் பணத்தை தற்போது வரை தன்னிடம் ஒப்படைக்கவில்லை என்று தெரிவித்தார். மேலும், திரு.V.பால்ராஜ் 25.08.2026-ம் தேதி பேருந்து நிலையம் மற்றும் பட்டாளம்மன் கோயில் ஆர்.ஓ குடிநீர் வசூல் ரூ.350/-க்கு தான் செலுத்துசீட்டு எண்.561/2026-2027, 562/2026-2027 போட்டுள்ளதாகவும், 26.08.2026-ம் தேதி பேருந்து நிலையம் மற்றும் பட்டாளம்மன்

கோயில் ஆர்.ஒ குடிநீர் வசூல் ரூ.625/-க்கு தான் செலுத்துசீட்டு எண்.564/2026-2027, 565/2026-2027 போட்டுள்ளதாகவும், மேற்படி பணம் ரூ.975/-ஐ தற்போது வரை அலுவலகத்தில் ஒப்படைக்கவில்லை என்று தெரிவித்தார். மேலும், 25.08.2026-ம் தேதி பேரூராட்சி அலுவலகத்தில் ரூ.589/- சொத்து வரி ரசீது எண்.2026-2027/200414/1/1975-ன்படி நேரடியாக வசூல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்து பணம் ரூ.589/- எடுத்து ஆஜர் செய்தார். அந்தப் பணம் அவரிடமே திரும்ப ஒப்படைத்து உரிய அரசு தலைப்பில் செலுத்த அறிவுறுத்தப்பட்டது. மேற்படி, சொத்து வரி ரசீதுகள்-23, குடிநீர் கட்டண ரசீது-1 மற்றும் ஆர்.ஒ குடிநீர் வசூல் செலுத்துச்சீட்டு-4 ஆகியவற்றின் நகல் விசாரணைக்காக செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது. பின்னர், 25.08.2026-ம் தேதி Challan Register-Property Tax, Profession Tax, Water Charges, Non-Tax, Trade Licence மற்றும் Bank Receipt Voucher abstract-ல் செயல் அலுவலர் திரு.S.ரவிசங்கர் மற்றும் திருமதி.C.மீனாட்சி ஆகியோரிடம் கையொப்பம் பெற்று விசாரணைக்காக செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது. பின்னர், செயல் அலுவலரிடம் முன்னாள் படைவீரர் நலன் கொடி நாள் நிதி வசூல் இலக்கு குறித்து கேட்க, தருமபுரி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்: செ.மு.ஆ.எண்.69/2026/பே4, நாள்: 19.01.2026 எடுத்து ஆஜர் செய்து, தேன்கனிக்கோட்டை தேர்வுநிலை பேரூராட்சிக்கு வசூல் இலக்கு ரூ.1,10,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், 27.08.2026-ம் தேதி வரை ரூ.12,500/- ஆன்லைனில் வசூலாகியுள்ளதாக தெரிவித்தார். மேற்படி, செயல்முறை ஆணைகள் மற்றும் ஆன்லைனில் வசூல் செய்யப்பட்ட விவரம் குறித்த அட்டவணையில் செயல் அலுவலரின் சான்றொப்பம் பெற்று விசாரணைக்காக செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது. பின்னர், அ1 இருக்கை இளநிலை உதவியாளர் S.முகமது இத்ரீஸ் மற்றும் அ2 இருக்கை இளநிலை உதவியாளர் M.சாமுண்டீஸ்வரி, ஆகியோரின் உடைமைகள் மற்றும் இருக்கைகள் சோதனையிடப்பட்டது. பின்னர், பதிவறை எழுத்தர் S.நவீன் குமார் என்பவரிடம் சோதனை மேற்கொண்ட போது தனது வலது பக்க பேண்ட் பாக்கெட்டிலிருந்து ஐநூறு ரூபாய் தாள்கள் கத்தையாக எடுத்து ஆஜர் செய்தார். நான் அதை எண்ணிப்பார்க்கையில் ஐநூறு தாள்கள் 30 எண்ணிக்கையில் ரூ.15,000/- இருந்தது. அது குறித்து விளக்கம் கேட்டதற்கு, தேன்கனிக்கோட்டை சேர்ந்த ஒரு நபர் புதிய குடிநீர் இணைப்பிற்காக தன்னிடம் ரூ.15,000/- கொடுத்துவிட்டு சென்றதாக தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம்

ஏற்கத்தக்க வகையில் இல்லாததால், சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில் வரி, கடை வாடகை வசூலித்தல், புதிய கட்டிடங்களுக்கு வரி விதித்தல், புதிய நிறுவனங்களுக்கு தொழில் வரி விதித்தல் மற்றும் காலி நிலங்களுக்கு வரிவிதித்தல் மற்றும் வசூல் செய்தல் ஆகிய பணிகளுக்கு முறையாக வரிவசூல் செய்யாமல் இருக்கவும், புதிய கட்டிடங்களுக்கு வரிவிதிப்பில் சலுகைகாட்டவும், புதிய நிறுவனங்களுக்கு குறைவாக தொழில் வரி விதிக்கவும், கடைவாடகை வசூல் செய்யாமல் இருக்கவும், பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் அலுவலர்களுக்கு கொடுப்பதற்காக பொது மக்களிடமிருந்து பெற்ற கையூட்டு பணமாக இருக்கக்கூடும் எனக் கருதி, மேற்படி பணம் ரூ.15,000/-ஐ விசாரணைக்காக செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றினேன். செயல் அலுவலர் திரு.S.ரவிசங்கர் அவர்களிடம் அலுவலக தனிநபர் பணப் பதிவேடு குறித்து கேட்டதற்கு, தேன்கனிக்கோட்டை தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகத்தில் மேற்படி பதிவேடு ஏதும் பராமரிக்கப்படவில்லை என தெரிவித்தார். பின்னர், வரி தண்டலர் C.மீனாட்சி, மற்றும் தற்காலிக கணினி இயக்குபவர்கள் P.யாஸ்மின் மற்றும் D.நாகராஜ் யாதவ் ஆகியோர்களின் உடைமைகள் மற்றும் இருக்கைகள் சோதனையிடப்பட்டது. பின்னர், செயல் அலுவலர் மற்றும் பதிவறை எழுத்தர் திரு.S.நவீன் குமார் ஆகியோர்களை அழைத்துச் சென்று பதிவறை சோதனையிடப்பட்டது. அந்த அறையில், மேற்குப்புற சுவற்றில் வடக்கு தெற்காக பிரிக்கப்பட்டுள்ள அடுக்குகளில் வடக்கு பக்கம் இரண்டாவது அடுக்கில் சோதனை செய்த போது வெள்ளை நிற பிளாஸ்டிக் பேக்கில் ஐநூறு ரூபாய் தாள்கள் ஒரு கட்டு இருந்தது. நான், அதை எண்ணிப்பார்க்கையில் ஐநூறு ரூபாய் தாள்கள் 140 எண்ணிக்கையில் மொத்தம் ரூ.70,000/- இருந்தது. நான், பதிவறை எழுத்தரிடம் அந்தப் பணம் குறித்து கேட்டதற்கு, தனக்கு எதுவும் தெரியாது என்று கூறினார். பின்னர், செயல் அலுவலரிடம் அந்தப் பணம் குறித்து கேட்டதற்கு அவரும் தனக்கு எதுவும் தெரியாது என்று கூறினார். பணத்திற்கு யாரும் உரிமை கோராததால், சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில் வரி, கடை வாடகை வசூலித்தல், புதிய கட்டிடங்களுக்கு வரி விதித்தல், புதிய நிறுவனங்களுக்கு தொழில் வரி விதித்தல் மற்றும் காலி நிலங்களுக்கு வரிவிதித்தல் மற்றும் வசூல் செய்தல் ஆகிய பணிகளுக்கு முறையாக வரிவசூல் செய்யாமல் இருக்கவும, புதிய கட்டிடங்களுக்கு வரிவிதிப்பில் சலுகைகாட்டவும், புதிய நிறுவனங்களுக்கு குறைவாக தொழில் வரி விதிக்கவும், கடைவாடகை வசூல் செய்யாமல் இருக்கவும், பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும்

அலுவலர்கள் பொது மக்களிடமிருந்து பெற்ற கையூட்டு பணமாக இருக்கக்கூடும் எனக் கருதி, மேற்படி பணம் ரூ.70,000/- விசாரணைக்காக செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றினேன். பின்னர், செயல் அலுவலரை அழைத்துக்கொண்டு ஹாலில் தென்கிழக்கே வடக்கு முகம் பார்த்தவாறு இருந்த அறைக்கு சென்று சோதனை மேற்கொண்டேன். அந்த அறையில் மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிக்காக தேன்கனிக்கோட்டை தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகத்தில் தொழில்நுட்ப உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.M.ராஜ்குமார் என்பவரின் உடைமை மற்றும் இருக்கை சோதனையிடப்பட்டது. பின்னர், சந்தேகத்தின் பேரில் அவருடைய அறையில் சோதனை மேற்கொண்டபோது, மேற்கு பக்க சுவற்றில் உள்ள அடுக்குகளில் ஆவணங்கள் கலைந்த நிலையில் இருந்தது. அதனருகே தரையில் சாய்த்து வைக்கப்பட்டிருந்த மகாத்மா காந்தி அரை உருவ சிலையின் அடியில் ஐநூறு ரூபாய் தாள்கள் கத்தையாக மறைத்து வைக்கப்பட்டிருந்தது. நான் அதை எண்ணிப்பார்க்கையில் ஐநூறு ரூபாய் தாள்கள் 70 எண்ணிக்கையில் ரூ.35,000/- இருந்தது. அந்தப் பணம் குறித்து திரு.M.ராஜ்குமார் அவர்களிடம் கேட்ட போது 27.08.2026-ம் தேதி காலை 10.15 மணி முதல் தான் அந்த அறையில் வேலை செய்து கொண்டிருப்பதாகவும், இடையில் வெளியில் சென்று வந்ததாகவும், அந்த பணம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும், அந்த அறையை பேரூராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் பயன்படுத்துவார்கள் என்றும் தெரிவித்தார். அந்தப் பணம் குறித்து செயல் அலுவலரிடம் கேட்ட போது தனக்கு அது பற்றி எதுவும் தெரியாது என்று கூறிவிட்டார். பணத்திற்கு யாரும் உரிமை கோராததால், சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில் வரி, கடை வாடகை வசூலித்தல், புதிய கட்டிடங்களுக்கு வரி விதித்தல், புதிய நிறுவனங்களுக்கு தொழில் வரி விதித்தல் மற்றும் காலி நிலங்களுக்கு வரிவிதித்தல் மற்றும் வசூல் செய்தல் ஆகிய பணிகளுக்கு முறையாக வரிவசூல் செய்யாமல் இருக்கவும், புதிய கட்டிடங்களுக்கு வரிவிதிப்பில் சலுகைகாட்டவும், புதிய நிறுவனங்களுக்கு குறைவாக தொழில் வரி விதிக்கவும், கடைவாடகை வசூல் செய்யாமல் இருக்கவும், பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் அலுவலர்கள் பொது மக்களிடமிருந்து பெற்ற கையூட்டு பணமாக இருக்கக்கூடும் எனக் கருதி, மேற்படி பணம் ரூ.35,000/- விசாரணைக்காக செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றினேன். பின்னர், தூய்மை பணியாளர் திரு.G.முரளி என்பவரிடம் சோதனை செய்த போது தனது பேண்டின் வலது முன்பக்க பாக்கெட்டிலிருந்து ஐநூறு ரூபாய் தாள்களை எடுத்து ஆஜர் செய்தார்.

நான், அதை எண்ணிப்பார்க்கையில் ஐநூறு ரூபாய் தாள்கள் 21 எண்ணிக்கையில் ரூ.10,500/- இருந்தது. அந்தப் பணம் குறித்து திரு.G.முரளியிடம் கேட்டதற்கு, தேன்கனிக்கோட்டை-ஒசூர் மெயின் ரோட்டில் கோட்ட வாசல் பகுதியில் தனது உறவினர்கள் முனியப்பன் கோவில் கட்டி வருவதாகவும், அதற்கு பணம் கொடுக்க தனது நண்பரிடம் கடன் வாங்கி வந்ததாக தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததால் மேற்படி பணம் செயல் அலுவலர் மற்றும் அலுவலர்களுக்காக கையூட்டாக பெற்ற பணமாக இருக்கக்கூடும் என கருதி விசாரணைக்காக செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றினேன். பின்னர், அலுவலகத்தில் இருந்த பொது மக்கள் திரு.A.ஸ்ரீராமன், த/பெ. அனுமந்தப்பா, க.எண்.18/ஏ, பிரசாத் தெரு, தேன்கனிக்கோட்டை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம், திரு.G.ரமேஷ், த/பெ. கோபாலப்பா, க.எண்.45/2, மாரசந்திரம் கிராமம், தேன்கனிக்கோட்டை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம், திரு.V.ராமன், த/பெ. வெங்கடப்பா, க.எண்.4/9, மாரசந்திரம் கிராமம், தேன்கனிக்கோட்டை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம், மற்றும் திரு.M.நவீன் குமார், த/பெ. மாரப்பா, க.எண்.1/37, அந்தேவனப்பள்ளி கிராமம், தேன்கனிக்கோட்டை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் ஆகியோரிடம் விசாரித்து சோதனை மேற்கொள்ளப்பட்டது. பின்னர், திரு.G.பாஸ்கர், த/பெ. கஸ்பார், க.எண்.4/2, விவேகானந்தா நகர், செயிண்ட் ஜோசப் பள்ளி அருகில், தேன்கனிக்கோட்டை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் என்பவரிடம் விசாரிக்க, தனது வீட்டு முகவரியில் "Society for Enhancing Empowerment and Development" என்ற தன்னார்வு தொண்டு நிறுவனத்தை நடத்தி வருவதாகவும், அதை கிருஷ்ணகிரி மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் பதிவு எண்.36/2020-ன்படி பதிவு செய்துள்ளதாகவும் தெரிவித்தார். அதில் சுயஉதவிக் குழுக்களில் உள்ள பெண்களுக்கு சிறு தொழில் செய்ய, தமிழ்நாடு கிராம வங்கியில் கடன் பெற்றுக் கொடுப்பது, சுயதொழில் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல், உடல் ஆரோக்கியம் மற்றும் கல்வி சம்பந்தமான விழிப்புணர்வு முகாம் போன்றவற்றை நடத்தி வருவதாக கூறினார். பெண்கள் சுயஉதவிக் குழுக்களுக்கு கூட்டம் நடத்த சுமார் 2000 சதுரடியில் கூட்ட அரங்கம் கட்டுவதற்கு, தான் தேன்கனிக்கோட்டை விவேகானந்தா நகரில் தனக்கு சொந்தமான இடத்தில் கட்டடம் கட்ட அனுமதி கோரி 13.08.2026-ம் தேதி ஆன்லைனில் விண்ணப்பத்திருப்பதாகவும், அதற்கு கட்டட அனுமதி பெற அரசு தலைப்பில் எவ்வளவு கட்டணம் செலுத்த வேண்டும் என்று தெரிந்துகொள்வதற்காக பேரூராட்சி அலுவலகம் வந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

பின்னர், திரு.G.பாஸ்கர், அவர்களிடம் சந்தேகத்தின்பேரில் சோதனை செய்தபோது, தனது வலது பேண்ட் பாக்கெட்டிலிருந்து இரண்டு ஐநூறு ரூபாய் கட்டுகளை எடுத்து ஆஜர் செய்தார். நான் அதை எண்ணிப்பார்க்கையில் ஐநூறு ரூபாய் தாள்கள் 100 எண்ணிக்கையில் ரூ.50,000/- மற்றும் ஐநூறு ரூபாய் தாள்கள் 68 எண்ணிக்கையில் ரூ.34,000/- என இரு கட்டுகளாக இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் விசாரித்த போது, பேரூராட்சி அலுவலகத்தில் கட்டட அனுமதிக்கு கேட்பு நிர்ணயம் செய்தவுடன் தொகையினை வங்கியில் செலுத்துவதற்காக கொண்டுவந்துள்ளதாக தெரிவித்தார். திரு.G.பாஸ்கர், அவர்கள் சொன்ன விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததால், கட்டட அனுமதி பெற பேரூராட்சி செயல் அலுவலர் திரு.S.ரவிசங்கர், மற்றும் பேரூராட்சி அலுவலர்களுக்கு கையூட்டாக கொடுப்பதற்கு கொண்டு வந்துள்ள பணம் என கருதி ரூ.84,000/-ஐ விசாரணைக்காக செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றினேன். மேலும், திரு.G.பாஸ்கர் என்பவரது Online Building Plan Application. SWP/BPA/0926592/2026 செயல் அலுவலர் திரு.S.ரவிசங்கர், அவர்களிடம் சான்றொப்பம் பெற்று விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர், தேன்கனிக்கோட்டை பேரூராட்சி அலுவலக பணியாளர்கள்/பொறியாளர்கள் வருகை பதிவேடு-2026 மற்றம் தேன்கனிக்கோட்டை பேரூராட்சி தூய்மை பணியாளர்கள் வருகை பதிவேடு-2026 ஆகியவற்றை நானும், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களும் பார்வையிட்டு, ஆகஸ்ட் மாத வருகை பதிவேட்டில் கையொப்பம் செய்து அவற்றின் ஒளிநகல் எடுத்து செயல் அலுவலர் அவர்களிடம் சான்றொப்பம் பெற்று விசாரணைக்காக செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றினேன். பின்னர், நான் திரு.G.பாஸ்கர் என்பவரது வாக்குமூலத்தை பதிவு செய்தேன். இந்த திடீர் சோதனையின் போது தேன்கனிக்கோட்டை தேர்வுநிலை பேரூராட்சி அலுவலர்கள் மற்றும் அலுவலகத்திலிருந்து கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத பணம் ரூ.2,14,500/-, கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் திரு.G.பாஸ்கர் என்பவரது வாக்குமூலத்தை திடீர் ஆய்வின்போது தயார்செய்த செயல்முறை நடவடிக்கையுடன் ஆஜர்படுத்துகிறேன். தேன்கனிக்கோட்டை தேர்வுநிலை பேரூராட்சியின் செயல் அலுவலர் திரு.S.ரவிசங்கர், பதிவறை எழுத்தர் திரு.S.நவீன் குமார், தூய்மை பணியாளர் திரு.G.முரளி, மற்றும் திரு.G.பாஸ்கர் ஆகியோர் மீது சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, (ஒப்பம் திரு.G.சக்திவேல்).

மேற்கண்ட புகாரினைப் பெற்று, சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, மேற்குச் சரக, காவல் கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவுப்படி, கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, குற்ற எண். 11/AC/2026 u/s 7(a) and 12 r/w 7(a) of the Prevention of Corruption Act, 1988, as amended in 2018, and Section 106 BNSS -ன்படி இன்று 28.08.2026-ம் தேதி 12.30 மணிக்கு வழக்கு பதிவு செய்து, முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் ஆகியவற்றை மாண்புமிகு மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிபதி, கிருஷ்ணகிரி அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்களைச் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்தேன்.

28.08.26